

கழக இளைஞரணிச் செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, கோவை, மாநகர் மாவட்ட இளைஞரணி சார்பில்,பீளமேடு பகுதி3, வார்டு எண்:53 க்குட்ட மசக்காளிபாளையம் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு, தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நலத்திட்ட உதவிகளை வழங்கி வாழ்த்தினார் உடன் கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் மாவட்ட துணைச்செயலாளர் கோட்டை அப்பாஸ், கிழக்கு மண்டல தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக் மாநகர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் இரா.தனபால், துணை அமைப்பாளர்கள் கே.பி. திருமலைராஜா, க.மணிகண்டன் துரை.பிரவீண் க.மணிகண்டன், லாராபிரேம்தேவ், இப்னு மசூது பகுதி செயலாளர்கள் சேரலாதன், செந்தமிழ்செல்வன், வட்டக்கழக செயலாளர்கள் சிவக்குமரன், மணிகண்டன் மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர்.பிரதீப்குமார்,முருகுசாமி, கோவை மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் சு. தனபால், திலக் அரவிந்த்குமார்,சாரமேடு இஸ்மாயில், பட்டேல், லட்சுமணன், சுபாஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழக இளைஞர்அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற இரத்ததான முகாமை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., தொடங்கி வைத்தார். உடன் கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தலாம் பி.கல்யாணம், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்ழகன், குத்தாலம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் மங்கை எம்.சங்கர், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், ஒன்றியக் குழு தலைவர் கே.மகேந்திரன், மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் சௌமியன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பி.எஸ்.பிரபாகரன், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் கோசி.மதி.திருமாவளவன், எஸ்.ஆர்.பாண்டியன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் மகேஷ், ஒன்றியக் குழு உறுப்பினர் ராக்கெட்ரமேஷ், மற்றும் பலர் உள்ளனர்.

### சின்னசேலம் - கள்ளக்குறிச்சி

# ரயில் பாதை பணிகளை விரைவுபடுத்துக!

## மக்களவையில் தே.மலையரசன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச.18-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் மக்களவையில் சின்ன சேலம் - கள்ளக்குறிச்சி ரயில் பாதை பணிகள் சுணக்கமாக நடைபெற்று வருவதாகவும் அதன் பணி களை விரைவு படுத்த வேண்டுமென வலியுறுத்தி னார்.

அதன் விபரம் பின்வரு மாறு.

எனது கள்ளக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட கள் ளக்குறிச்சி, சேலம்,தியாகது ருகம் மற்றும் ரிஷிவந்தியம், திருக்கோவிலூர் பகுதி மக்க ளின் கோரிக்கைகளுடன் எனது உரையை துவங்கு கிறேன், எங்கள் கள்ளக்



குறிச்சி மாவட்டம் 2019ல் புதிய மாவட்டமாக அறி விக்கப்பட்டது, எங்கள் மாவட்டத்தில் 16 லட்சத் துக்கு மேல் மக்கள் வசித்து வருகிறார்கள்,புதிய ரயில் பாதை அமைக்கும் வகை யில் சின்னசேலத்தில் இருந்து கள்ளக்குறிச்சி வரை மாநில அரசுடன் சேர்ந்து கடந்த 2016ல் தொடங்கப்பட்டது, 8 வரு டம் கடந்த நிலையில் இன்று வரை அந்தப் பணி சுணக்கமாக நடைபெற்று வருகிறது,அந்தப் பணி களை மிக விரைவாக நடத்தி தர வேண்டும், அதே போல் முகையூர் வரை புதிய ரயில் பாதை அமைத்து தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட் டுக்கொள்கிறேன்,இதனால் சென்னையிலிருந்து சேலம் வரை செல்லும் பயணிகள் நேரம் இரண்டு மணி நேரம் குறையும், எனவே பயணிக ளின் நலன் கருதியும், எங் கள் மாவட்ட மக்களின் நலன் கருதியும் இந்த திட்டத்தை உடனே துவங்கு மாறும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் எங்களின் தமிழக முதல்வர், கழகத் தலைவர், திராவிட நாயகர், சமூக நீதி காவலர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் என்ற கோட்பாடுடன் தமிழக மக்களுக்கு கட்சி பாகுபாடு இல்லாமல் அனைத்து திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார்.

அதுபோல் ஒன்றிய அர சும் அனைத்து மாநிலங்க ளுக்கும் பாகுபாடு இல்லா மல் அனைத்து திட்டங் களையும் செயல்படுத்தி தர வேண்டும் என்று மக்கள வையில் கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் வலியுறுத்தினார்.



தஞ்சை வடக்கு மாவட்டம் கும்பகோணத்தில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி ஏற்பாட்டில் கும்பகோணம் மாநகராட்சியில் பணிபுரியும் 750 பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் வழங்கினார். விழாவில் மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செ.இராமலிங்கம், சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன் உள்ளிட்ட ஒன்றிய, பேரூர், பகுதிக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### அரியலூர் மாவட்டம் டெல்டா பகுதி தா.பழூரில்

# கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆய்வு!

## பாதிக்கப்பட்ட விவசாயிகளிடம் கோரிக்கையை கேட்டறிந்தார்!

அரியலூர், டிச. 18-

அரியலூர் மாவட்டம் தா.பழூர் ஒரு டெல்டா பகுதி கடந்த இரண்டு நாட் களாக பெய்த கனமழை யால் இப்பகுதி பெரிதும் பாதிக்கப்பட்டது. பாதிக் கப்பட்ட பொது மக்களின் வாழ்வாதாரத்தினை உறுதி செய்ய அதிகாரிகளுக்கு அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவுறுத்தினார்.

அரியலூர் மாவட்டம் தா. பழூர் ஒன்றிய பகுதிக ளில் உள்ள கிராமங்களில் கனமழையினால் பாதிக்கப் பட்ட சாலைகள்,பாலங் கள், விவசாய நிலங்கள் நீர்த் தேக்கங்கள் உள்ளிட்டவை களை தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் மழையினால் பாதிக்கப் பட்ட விவசாயி களிடம் குறைகளை கேட்டறிந் தார்.

அரியலூர் மாவட்டத் தில் கடந்த சில தினங்களாக அதி கனமழை பெய்து வரு வதால் நீர்நிலைகள் வெகு வாக நிரம்பத் தொடங்கின.

மேலும் டெல்டா பாசன பகுதிகளான தா.பழூர் பகு திகளில் தமிழகத்தின் இரண் டாவது அதிகப்படியான மழை அளவு 40 சென்டிமீட் டர் பெய்தது. இதனால் சாலைகள் விவசாய விளை நிலங்கள் உள்ளிட்டவை கள் நீரில் மூழ்கின. கிராமப் புற சாலைகள் நிர்வாக பாதிப்புக்கு உள்ளாகின.

கடந்த இரண்டு நாட்க ளாக குன்னம் தொகுதி செந்துறை, உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பார்வையிட்டு அப்பகுதிக ளில் மழையினால் பாதிக் கப்பட்டோர்களுக்கு நிவா ரண பொருட்கள் வழங்கிய தமிழ்நாடு அரசு போக்குவ ரத்துதுறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், அரியலூர் மாவட்டம் விக்கிரமங் கலத் தில் உள்ள அத்திகுளம் ஏரி யினை பார்வையிட்டு கரை யினை பலப்படுத்தும் பணி யினை ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து கனமழையால் பாதிக்கப் பட்ட உல்லியக்குடி அம் பாப்பூர் சாலையினை பார் வையிட்டு,

முத்துவாஞ்சேரி, சாத்தம் பாடி, அரங்கோட்டை,

ஸ்ரீ புரந்தான் , கிராமங்க ளில் கனமழையால் பாதிக் கப்பட்ட நிலங்களை பார் வையிட்டதுடன் விவசாயி களிடம் கோரிக்கைகளை கேட்டறிந்தார். தொடர்ந்து சுத்தமல்லி (டேம்) நீர்த்தேக்கதை பார்வை யிட்டு அணைகளின் உறு தித்தன்மையை அதிகாரிகளி டம் கேட்டறிந்தார். பொன்னாற்றில் ஏற்பட்ட வெள்ளத்தினை வெளியேற் றும் விதமாக அணைக்குடி தடுப்பணைகளை பார்வை யிட்டு அதிகாரிகளோடு ஆய்வு மேற்கொண்டு மழை நீர் வெளியேற்றத்தை துரி தப்படுத்த அதிகாரிகளிடம் ஆலோசனை வழங்கினார்.

கடந்த இரண்டு தினங்க ளாக அரியலூர் மாவட்டங் களில் உள்ள பல்வேறு இடங்களில் மழையினால் பாதிக்கப்பட்ட கிராமப்புற பகுதிகள், சாலைகள், விவ சாய நிலங்கள், நீர்த்தேக் கங்கள் என அனைத்து பகு திகளிலும் ஆய்வு மேற் கொண்ட தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் மழையினால் பாதிக்கப் பட்ட இடங்களை ஆய்வு மேற்கொண்டதுடன் பொதுமக்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவது, விவசாயிகளிம் கோரிக்கை களை பெறுவது உள்ளிட்ட நடவடிக்கைகளில் ஈடுபட் டதுடன் அதிகாரிகளிடம் மீட்பு நடவடிக்கைகளில் துரித கவனம் செலுத்த அறி வுறுத்தினார்.



துணை முதல்வரின் பிறந்தநாளையொட்டி தருமபுரி மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர். சந்திரசேகரன் ஏற்பாட்டில் வெள்ளிசந்தையில் 300 ஏழை எளிய பெண்களுக்கு புடவைகளை தர்மபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் வழங்கினார். உடன் தொகுதி பொறுப்பாளர் அரியப்பன், ஒன்றிய கழகச்செயலாளர்கள் வழக்கறிஞர். எம்வீடி.கோபால், இல.கிருஷ்ணன், உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.




கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை சார்பில் மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி வழிகாட்டுதலின்படி, மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் தலைமையில், சூரம்பட்டி பகுதி கழக செயலாளர் எ..முருகேசன் முன்னிலையில் திண்டல் கொங்கு அறிவாலயம் மனவளர்ச்சி குன்றியோர் தொழில் பயிற்சி பள்ளியில் குழந்தைகளுக்கு மதிய உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது . நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வார்டு கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### ஈரோடு வடக்கு மாவட்டம் - நம்பியூரில் துணை முதலமைச்சர்

# உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் நிகழ்ச்சிகள்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் பங்கேற்பு!

ஈரோடு, டிச.18-

கழக இளைஞரணி செய லாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதய நிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு வடக்கு மாவட்டம் நம்பியூர் ஒன்றிய கழக செய லாளரும், நம்பியூர் பேரூ ராட்சி தலைவருமான மெடிக்கல். ப.செந்தில் குமார் தலைமையில், மாவட்ட பிரதிநிதி பி.வி. இளங்கோ முன்னிலையில், மாவட்டக் கழகச் செய லாளர் என்.நல்லசிவம் கலந்து கொண்டு நிகழ்ச்சி களை துவக்கி வைத்து நல உதவிகள் வழங்கினார்.

ஈரோடு வடக்கு மாவட் டம், நம்பியூர் ஒன்றியம், கோசணம் ஊராட்சி, திட் டமலை அரசு கலைக் கல்லூ ரியில் “நமக்கு நாமே” திட் டத்தின் மூலம் ரூ.15 இலட்சம் மதிப்பிலான கான்கிரீட் சாலை அமைக் கும் பணியினை துவக்கி வைத்தார்.

அருள்மிகு திட்டமலை முருகன் திருக்கோயில் தேர் இரண்டு வருடமாக பழுத டைந்துள்ளதை சீர் செய்து சிறப்பாக திருவிழா கொண் டாட பார்வையிட்டு உரிய நடவடிக்கை மேற்கொண் டார்.

பொத்தம்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளி யில் பத்தாம் வகுப்பில் முதல் மூன்று மதிப்பெண் கள் பெற்ற மாணவ, மாண விகளுக்கு கேடயம் வழங்கி யும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் இனிப்பு வழங்கினார்.

பொத்தபாளையம் அங் கன்வாடி குழந்தைகளுக்கு 20 நாற்காலிகள், விளை யாட்டு உபகரணங்கள் இனிப்புகள் வழங்கினார்.

பொத்தபாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் விளையாட்டு மைதானம் அமைக்கும் பணிகளை துவக்கி வைத்தார்.

கே.மேட்டுப்பாளையம் ஆதி திராவிடர் காலனி கிளைக் கழகத்தில் உயிர் நீத்த கழக மூத்த முன் னோடி கருப்பாயாள் அவர் களின் இல்லத்திற்கு சென்று நலத்திட்ட உதவிகள் வழங் கினார்.

இந்நிகழ்வுகளின் போது மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக் கழக நிர்வாகிகள் சார்பு அணிக ளின் நிர்வாகிகள், உள் ளாட்சி பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### செஞ்சியில்

# செஞ்சி மஸ்தான் நல உதவிகள் வழங்கினார்!

செஞ்சி டிச 18-

கடந்த சில தினங்களுக்கு முன்பு விழுப்புரம் மாவட் டத்தில் பெஞ்சால் புயல் மழையால் பெரும் சேதம் ஏற்பட்டது. இந்தப் புயல் சேதத்தால் பாதிப்படைந்த வீடுகள் மற்றும் நிலங்களுக்கு நிவாரணம் வழங்க தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின்அவர்கள் உத்தரவிட்டுள்ளார். அந்த வகையில் விழுப்புரம் மாவட்டத்தில் மழை வெள் ளத்தால் பாதிப்படைந்த குடும்பங்கள் கணக்கெ டுப்பு செய்யப்பட்டு நிவார ணங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இதையடுத்து செஞ்சி சட்டமன்ற தொகுதிகளில் தமிழக அரசின் 2000 ரூபாய் அரிசி, சர்க்கரை, பருப்பு உள்ளிட்ட நிவாரண பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

செஞ்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டு றவு விற்பனை சங்கம் வங்கி யில்நடைபெற்ற நிகழ்ச்சி யில் செஞ்சி தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு புயல் மழையால் பாதிக்கப் பட்ட குடும்பஅட்டை தா ரர்களுக்கு 2000 ரூபாய், அரிசி சர்க்கரை பருப்பு உள் ளிட்ட நிவாரணப் பொரு ட்களை வழங்கினார்.

இதில் வட்டாட்சியர் ஏழுமலை,செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜய குமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தி யார் அலிமஸ்தான், சங்கசெ யலாட்சியர்மாரியப்பன், வங்கி பொது மேலாளர் தேசிங்கு,நகர செயலாளர் கார்த்திக்,பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் அஞ்சலை நெடுஞ்செழியன், சங் கர்,மாவட்ட பிரதிநிதி காளி சுப்பிரமணி யன்,முன்னாள் கவுன்சிலர் சீனிவாசன், நிர்வாகிகள் பொற்கொடி இளவரசன், சிங்கம் சேகர், தொண்டரணி பாஷா, பூவழகி, அய்யாதுரை, கார் வண்ணன்உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



திருப்பூர் தெற்கு மாவட்டம், மூலனூர் கிழக்கு ஒன்றியம், வேளாம்பூண்டி ஊராட்சி, பெருமாள்வலசு ஆதிதிராவிடர் காலனியில் அமராவதி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என். கயல்விழி செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல. பத்மநாபன் ஆகியோர் உணவு வழங்கினர். இதில் ஒன்றிய கழக செயலாளர், ஒன்றியக்குழு துணைத் தலைவர் ப.பழனிசாமி, கன்னிவாடி பேரூர் செயலாளர் கோ.சுரேஷ், எம்.குமாரபாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் நா.செல்லமுத்து உள்பட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் தெற்கு மாவட்ட திமுக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் விழுப் புரம் கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அமைப்பாளர் ப.அன்பரசு தலைமையில் நடைபெற்றது.

மண்டலச் செயலாளர் அ தமிழ்மாறன் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளையும், அறிவுரை களையும் வழங்கினார். துணை அமைப்பாளர்கள் சாம்ப சிவம், பாலாஜி, புஷ்பராஜ், சசிரேகாபிரபு, கிருஷ்ணராஜ், தொகுதி அமைப்பாளர்கள் தேவா, விஜயகுமார், நாராயணமூர்த்தி , குருராமலிங்கம், மகாலட்சுமி, வீரமணிகண்டன், கதிரவன், குமரவேல், விஜயகுமார், மகளிர் பிரிவு ராதிகா, மூகாம்பிகை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில், தமிழக துணை முதல்வராக உதயநிதிஸ்டாலினை நியமித்த முதலமைச்சருக்கு நன்றி தெரிவிப்பது. பெஞ்சல் புயல் பாதிக்கப்பட விழுப்புரம் மாவட்டத்திற்கு நேரில் வந்து அமைப்பு பணிகளை துரிதப்படுத்தி நிவாரணம் வழங்கிய தமிழக முதலமைச்சர், துணை முதலமைச்சர் மற்றும் வனத்துறை அமைச்சர் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் உள்ளிட்டவர்களுக்கு நன்றி தெரிவிப்பது. வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதிகளை வெற்றி பெற தகவல் தொழில் பணி சிறப்பாக பணியாற்றுவது , அரசின் சாதனை திட்டங்களை சமூக வலைதளங்கள் மூலம் பட்டி தொட்டி எங்கும் கொண்டு செல்வது என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.